## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 64/2016**

திரு. சின்னசாமி (P.W. –1) **16.03.2026**

6ம் பிரதிவாதி தரப்பில் அழைத்து ஆஜர் இல்லை. 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா விசாரணைக்கு என்னுடைய மகள்கள் என்னுடன் வந்துள்ளார்கள் என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள பூமி 24.70 ஏக்கர் என்றால் சரி. அந்த சொத்து என்னுடைய மனைவியின் தாயார் மற்றும் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. என்னுடைய மனைவியுடன் சேர்த்து அவருடைய தாயாருக்கு ஐந்து பெண் மக்கள் என்றால் சரி. அவர்கள் தனலட்சுமி, பாலாமணி, கமலாத்தாள், சாரதாம்மாள், சிவகாமி. அதில் கமலாத்தாள் முன்பே இறந்து போனார். அவருடைய வாரிசுகள் யார் என்றால் முருகானந்தம், தீபா, சந்தியா ஆகியோர். கமலாத்தாளின் கணவர் பெயர் என்ன என்றால் சண்முகசுந்தரம். சந்தியாவும், தீபாவும் சொத்துக்களில் பாகம் வேண்டாம் என்று சொல்லி முருகானந்தத்திற்கும், சண்முகசுந்தரத்திற்கும் விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்து உள்ளார்கள் என்றால் சரி. அதனால் பாகப்பிரிவினை பத்திரத்தில் அவர்களை விட்டு விட்டீர்கள் என்றால் ஆமாம். அவர்கள் இருவரும் எங்கு வசிக்கிறார்கள் என்றால் ஒருவர் திருப்பூர் ராயபுரத்திலும், மற்றொருவர் ஒட்டன்சத்திரத்திலும் வசிக்கிறார்கள்.

2. அவர்களுக்கும் எங்களுக்கும் இடையே மனக்கசப்பு இல்லை என்றால் சரி முருகானந்தமும் சண்முகசுந்தரமும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரி. அவர்களுடைய இறப்பு காரியங்களில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை.

குடும்பத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். கொடுவாயில் உள்ள சோமசுந்தரம் பத்திர எழுத்தர் என்றால் ஆமாம். அவர்தான் எங்களுக்கு எல்லா பத்திரங்களையும் ஏற்பாடு செய்து எழுதுவார் என்றால் ஆமாம். கந்தசாமிக்கும் அவர் தான் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சாட்சி தனிச்சையாக முன்வந்து கூறுகிறார். சண்முகசுந்தரம், முருகானந்தமும் 1999 ஆம் வருடம் ஒரு ஆவணத்தை எழுதியுள்ளார்கள் அதையும் சோமசுந்தரம் தான் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது.

3. சோமசுந்தரத்திற்கும் எனக்கும் எந்த மன விரோதமும் இல்லை என்றால் சரி. அவர் தற்போது உயிருடன் இல்லை எப்போது இறந்து போனார் என்றால் தெரியாது. முதல் பிரதிவாதி கந்தசாமி தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு பார்த்து உள்ளீர்களா என்றால் இல்லை. முதல் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் உறவோ, பழக்கமோ இல்லை என்றால் சரி. என்னுடைய மகள்கள் திருப்பூரில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். என் மனைவியுடன் பிறந்த சகோதரி தனலட்சுமி தற்சமயம் உயிருடன் இல்லை என்றால் ஆமாம். தனலட்சுமி, கமலாத்தாள், என் மனைவி பாலாமணி ஆகியோர் உயிருடன் இல்லை. தனலட்சுமி இறப்பிற்கு குடும்பத்துடன் சென்றோம் என்றால் ஆமாம். தனலட்சுமியின் மகள் தான் தாவா 6ம் பிரதிவாதி சுகந்தி என்றால் சரி. அவரும் நாங்களும் சேர்ந்து வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் தவறு. நாங்கள் வழக்கு நடத்துகிறோம்.

4. தாவா சொத்து என்னுடைய மனைவிக்கு ஒதுக்கப்பட்டதால் மற்றவர்கள் யாரும் தாவா சொத்தை பொறுத்து தாவாவை நடத்த வரவில்லை என்றால் தவறு. அவர்கள் வரவில்லை நாங்கள் நடத்துகிறோம். சண்முகம் சுந்தரத்தின் வீடு எங்கு உள்ளது என்றால் பொள்ளாச்சியில் உள்ளது. சண்முகசுந்தரம், முருகானந்தத்தின் மீது திருப்பூரில் எங்கு உள்ளது என்றால் ராயபுரத்தில் உள்ளது. சண்முகசுந்தரம் கொடுவாயில் சோமசுந்தரம் வீட்டில் இருந்து சாப்பிட்டு வந்தார் என்று சாட்சி தன்னிச்சையாக முன்வந்து கூறுகிறார். அங்கு எவ்வளவு நாட்கள் இருந்தார்

என்றால் மூன்று வருடங்கள் இருந்தார். அதன் பிறகு மருதமலைக்கு அருகில் இருந்தார்.

5. சண்முகசுந்தரம் தாவா சொத்துக்களை பொறுத்து ஆவணங்கள் ஏற்பட்ட போது எங்கு வசித்து வந்தார் என்றால் ராயபுரத்தில் வசித்து வந்தார். வா.சா.ஆ– 16 பாகப்பிரிவினை பத்திரத்தில் சண்முகசுந்தரம் நல்லூர் புதுப்பாளையத்தில் வசித்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ–10,11 ஆவணங்கள் யார் வாங்கி கொடுத்தார்கள் என்றால் தீபா வாங்கி கொடுத்தார். வா.சா.ஆ–10 ல் சண்முகசுந்தரம் இறந்து போன விவரங்கள் 19.11.2015 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் அவர் 2011 இல் இறந்து போனார். அதில் இறந்து போன சண்முக சுந்தரத்தின் முகவரி ஐஓபி காலனி, மருதமலை ரோடு, கோயம்புத்தூர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த விலாசத்தில் தான் சண்முகசுந்தரம் இறப்பதற்கு முன்பு வசித்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அதற்கு ஆவணங்கள் என்னிடம் இல்லை.

6. வா.சா.ஆ–10 இறப்புச் சான்றிதழ் தாவாவில் சொல்லியுள்ள சண்முகசுந்தரத்துடையது இல்லை வேறு ஒரு நபருடையது என்றால் தவறு அதனால் தான் 2015 ஆம் வருடம் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காக சண்முகசுந்தரம் 2011 ஆம் வருடம் இறந்து போனதாக கூறி அதற்கேற்றார் போல் வா.சா.ஆ–10 தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. வா.சா.ஆ–11. 8.12.2014 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் அவர் 29.4.2013 இறந்து போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.. வா.சா.ஆ–11 ல் குறிப்பிட்டுள்ள தேதியில் முருகானந்தம் இறக்கவில்லை வழக்கிற்காக இந்த ஆவணமும் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு.

7. வா.சா.ஆ–11 உண்மையிலேயே ஏற்பட்டிருந்தால் அதற்குரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இருக்கும் அந்த ஆவணங்களை தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. இறந்த தேதியிலிருந்து ஒன்று வருடங்கள் கழித்து பதிவு

செய்யப்பட்டுள்ளதாக உள்ளதை வைத்து பார்க்கும் போது இந்த ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. முறையாக வருவாய் துறை அதிகாரிகளிடம் மனு தாக்கல் செய்து உத்தரவுகள் பெற்று இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ– 10, 11 இல் குறிப்பிட்டுள்ள தேதிகளில் முருகானந்தமும், சண்முகசுந்தரமும் இறக்கவில்லை. தாவா வழக்கு எண் 294/2007 முடிந்த பிறகு தான் அவர்கள் இறந்து போனார்கள் என்றால் சரியல்ல.

8. உண்மையிலேயே வா.சா.ஆ– 10, 11 படி அவர்கள் இருவரும் இறந்து போயிருந்தால் அசல் வழக்கு எண்.294/2007 மற்றும் நிறைவேற்ற மனுஎண்.24/2012 ல் முறையாக தெரிவித்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. எந்த ஒரு தரப்பினரும் அந்த விபரங்களை அப்போது தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. 1999 ஆம் வருடம் சண்முகசுந்தரமும், முருகானந்தத்திற்கும் இடையே பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதை விவரம் தெரிந்து கொண்ட பிறகு அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் தெரியாது. வழக்கறிஞரை கேட்க வேண்டும். வா.சா.ஆ–7 ஆவணத்தில் பட்டா எண் 369 ல் முதல் பிரதிவாதி கந்தசாமியின் பெயரும் கூட்டு பட்டாவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

9. தீபா மற்றும் சந்தியா ஆகிய இருவரும் எங்களுக்கு தாவாவை தாக்கல் செய்ய ஏதேனும் அதிகாரம் கொடுத்து உள்ளார்களா என்றால் இல்லை. அவர்களுக்கு தாவா விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண். 294/2007 முடியும் வரை சண்முகசுந்தரமும் முருகானந்தமும் உயிருடன் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. அப்படி இருந்திருந்தாலும் அதை பொறுத்து நடவடிக்கை தீபாவும், சந்தியாவும் தான் எடுக்க முடியும் நாங்கள் எடுக்க முடியாது என்றால் தவறு. அந்த உரிமையை பொறுத்து வாரிசுதாரர்கள் தான் நடவடிக்கை எடுக்க முடியும். நாங்கள் எடுக்க முடியாது என்றால் சரியல்ல. கந்தசாமி முதலில் 2007 இல் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு வந்த பிறகு தான் சண்முகசுந்தரமும், சோமசுந்தரமும் பிரதிவாதி பெயரில் சொத்துக்களை பொறுத்து

ஏற்படுத்தி உள்ள ஆவணங்களை அவர்களே தீர்த்துக் கொடுப்பதாக சொல்லி இருந்தார்கள் என்றால் சரி.

10. அதற்காக தான் வெற்று காகிதங்களில் என் மனைவி கையொப்பம் மட்டும் செய்து சோமசுந்தரத்திடம் கொடுத்தாரா என்றால் ஆமாம். நாங்கள் கந்தசாமி இடம் சென்று என்ன வழக்கு என்பதை பொறுத்து கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். 2010 ல் நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு வந்த பிறகு சோமசுந்தரத்திடமும், சண்முகசுந்தரத்திடமும் சென்று கேட்டீர்களா என்றால் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று அவர்கள் சொன்னதால் நாங்கள் கேட்கவில்லை. 2007 ஆம் வருடம் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திய போது சண்முகசுந்தரத்திற்கு 40 அடி தென் வடல் ரோட்டில் கிழபுறமாக ஒரு பாகமும், மேற்புறமாக ஒரு பாகமும் ஒதுக்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

11. அவருக்கு ஐந்து ஏக்கர் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒதுக்கி தரப்பட்டது. 2007 பாகப்பிரிவினையின்படி தாவா சொத்து எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் தான் உரிமை கோருகிறோம் என்றால் ஆமாம். 2007 ஆம் வருடம் பாகப்பிரிவினை ஏற்பட்ட விவரங்களை ஏற்கனவே நடந்த அசல் வழக்கு எண். 294/2007 இல் நானும் சண்முகசுந்தரமும் சொல்லவில்லை என்றால் தவறு. அந்த வழக்கில் பாகப்பிரிவினை விவரங்கள் தாக்கல் செய்துள்ளோம். என்னுடைய மனைவி அவருடைய வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்துள்ளார். 2005 இல் சண்முகசுந்தரம் முதல் பிரதிவாதிக்கு ஒரு ஏக்கர் சொத்துக்களை எழுதி கொடுத்து உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. பாகமே ஏற்படவில்லை அந்த ஆவணமே செல்லாது என்று சாட்சி தனிச்சியாக முன்வந்து கூறுகிறார்.

11. கந்தசாமிக்கு, சண்முகசுந்தரம் ஒரு ஏக்கர் சொத்துக்கள் 2005 இல் ஏற்படுத்திக் கொடுத்தது ஆவணம் ஏற்பட்ட போதே எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. எங்களுடைய பங்கில் ஒரு ஏக்கர் கந்தசாமிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதை சோமசுந்தரமும், சண்முகசுந்தரமும் சரி செய்து கொடுப்பதாக

சொன்னார்கள். எப்போது சொன்னார்கள் என்றால் 2007 இல் கொடுவாயில் வைத்து சொன்னார்கள். 2005 ஆம் வருடம் முதல் பிரதிவாதி கந்தசாமி பெயரில் ஒரு ஏக்கர் சொத்தை பொறுத்து கிரையம் ஏற்பட்ட பிறகு அவரை தரப்பினராக சேர்க்காமல் 2007 ஆம் வருடம் ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினை ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

12. எல்லா பிரச்சனைகளும் தெரிந்து இருந்தும் வழக்கு விபரங்கள் உள்ளது என்பதை தெரிந்த பிறகு 2007 ஆம் வருடம் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்ட பிறகு 2008 ஆம் வருடம் பிழை திருத்தல் ஆவணம் ஏற்பட்டதும் செல்லாது என்றால் சரியல்ல. அதனால் முதல் பிரதிவாதி பெயரில் உள்ள ஒரு ஏக்கர் சொத்தை பொறுத்து தாவாவில் கோரியுள்ளவர்களும் விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.294/2007 வழக்கு விவரங்களை எங்களுக்கு தெரியும். நானும், என் மனைவியும் தான் தாவாவை நடத்தி வந்தோம். தற்போது இந்த வழக்கிற்காக அந்த விவரங்கள் தெரியாது சண்முகசுந்தரம் நடத்தி வந்தார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. சண்முகசுந்தரம் ஏன் கோயம்புத்தூருக்கு சென்றார். அவருக்கு ஏதேனும் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு விட்டதா என்றால் தவறு. அவருக்கு மனைவி இல்லை. அதனால் தனியாக இருந்ததால் அவர் விருப்பம் போல் சென்று இருந்தார். அதைப்பற்றி நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை.

13. சண்முகசுந்தரம் மேம்போக்கான நிலையில் வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளதால் அவரை நம்பி வழக்கை நாங்கள் விட்டுவிட்டோம் என்று சொல்வது நம்பும்படியாக இல்லை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றான் சரியல்ல. வழக்கு விபரங்கள் எங்களுக்கு நன்கு தெரியும் தெரிந்து கொண்டு நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பே வரவில்லை என்று இந்த வழக்கில் பொய்யாக காரணங்கள் கூறி இடைக்கால மனு எண்.1269/2014, 1270/2014 தாக்கல் செய்து பொய் சாட்சிளம் அளிக்கிறேன் என்றால் தவறு. அந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் அனைத்தும் பொய் அந்த மனுக்கள் நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு.

14. அசல் வழக்கின் 294/2007 நீதிமன்ற ஆணையம் தாக்கல் செய்த அறிக்கை தவறுகள் இருந்தால் நாங்கள் தரப்பினர்களாக உள்ளதால் மேல்முறையீடு தான் செல்ல வேண்டும் அதைப் பொறுத்து பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு அந்த மனுக்களும் இந்த தாவாவும் செல்லத்தக்கதல்ல தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இறுதிநிலை தீர்ப்பாளை மனதில் தரப்பினர்களாக உள்ளதால் அதை எதிர்த்து மேல்முறையீடு தான் தாக்கல் செய்ய வேண்டும். அந்த தீர்ப்பானையே செல்லாது என்று தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. முதல் உதவி விசாரணை வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கந்தாய ரசீதுகள் முதல் பிரதிவாதி கந்தசாமி கிரையம் பெற்றுள்ள சொத்துக்களுக்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

15. குறுக்கு விசாரணையில் சண்முகசுந்தரம் மற்றும் முருகானந்தம் இறப்பிற்கு செல்லவில்லை என்று சொல்லி உள்ளதால் நான் தற்சமயம் அவர்கள் இறந்த தேதியை நான் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல தீபாவிடமிருந்து தான் இறப்பு சான்றிதழ் பெற்றேன். வா.சாஆ –10, 11 ஆவணங்கள் நான் தீபாவிடம் பெறவில்லை வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் தவறு. அவர்களுடைய இறப்பிற்கே நான் செல்லாத போது அவர்களை நம்பி அசல் வழக்கு எண்.294/2007 வழக்கை நடத்த ஒப்படைத்ததாக நான் சொல்வதே பொய் என்றால் சரியல்ல. என் மனைவியும் மற்ற குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டு முதல் பிரதிவாதியும் கிரயம் பெற்ற சொத்தை ஏமாற்ற வேண்டி 2007 ஆம் வருடம் மோசடியாக பாகப்பிரிவினை பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம் என்றால் தவறு.

16. முதல் விசாரணை வாக்குமூல சங்கதிகள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதி பெயரில் ஏற்படும் தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்ற பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் தவறு. என் மனைவி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கின் 64/2016 மற்றும் இடைக்கால மனு

எண்கள்.1269/2014, 1270/2014 ஆகியவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் தவறு. எதிர் கோரிக்கை முதல் பிரதிவாதி மனுவின் படி 2007 ஆம் வருடம் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்ற பரிகாரம் வழங்க வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2026.03.16 18:54:12 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.